# தரம் - 10

## அலகு - 1

# வெற்றிவேற்கை



# தமிழ்மொழியும் இலக்கியமும்

MR .S.ROBERT
CP/W/BHARATHI TAMIL MAHA
VIDYALAYAM
WATTEGAMA

## உள்ளே ....

நீதிப்பாடல் என்றால் என்ன ?

வெற்றி வேற்கை பற்றிய விளக்கம்

செய்யுள்

பதபிரிப்பு

அருஞ் சொற்கள்

பொருள்

பனைமரத்தின் இயல்பு

ஆலமரத்தின் இயல்பு

நீதிப்பாடல்கள் என்பது .....

மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்க்கான ஒழுக்க நெறிகளையும்,வாழ்க்கையைச் செம்மையாக்கும் சீரிய நற்கருத்துக்ளைக் கொண்டவை நீதிப்பாடல்களாகும்.

# வெற்றி வேற்கை



- இந்நூல் நாயக்கர் காலத்தில் வாழ்ந்த அதிவீரராம பாண்டியன் என்னும் மன்னனால் இயற்றப்பட்டது
- இந்நூலை நறுந்தொகை எனவும் அழைப்பர்
- இந்நூல் நாற்பது பாடல்களை கொண்டது
- இவற்றில் ஒரு அடி முதல் பதினைந்து அடி வரை பாடல்கள் பாடப்பட்டுள்ளது.





தரம் -10 தமிழ்மொழியும் இலக்கியமும் நீதிப்பாடல்கள்





தரம் -10 தமிழ்மொழியும் இலக்கியமும் நீதிப்பாடல்கள்





# செய்யுள்

தேம்படு பனையின் திரள் பழத்தொரு விதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்களிருக்க நிழலாகுமே
அதனால்
பெரியோரெல்லாம் பெரியோருமல்லர்
சிறியோரெல்லாம் சிறியோருமல்லர்

# பதவுரை

பனையின் தேம்படு திரள் பழத்து ஒரு விதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவர்க்கு இருக்க நிழலாகாதே
ஆலின் தெள்ளிய சிறு பழத்து ஒரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணித்தேர்புரவி ஆட்பெருபடையொடு
மன்னர்கள் இருக்க நிழலாகுமே
அதனால் பெரியோரெல்லாம் பெரியோருமல்லர்
சிறியோரெல்லாம் சிறியோருமல்லர்

## அருஞ் சொற்கள்

| | | |
|---|---|---|
| தேம்படு | - | இனிமை நிறைந்த |
| திரள் பழம் | - | திரண்ட பழம் |
| வானுற | - | உயரமாக |
| தெள்ளி | - | தெளிந்தெடுக்கத்தக்க |
| தெண்ணீர் | - | தெளிந்த |
| கயம் | - | குளம் |
| சினை | - | முட்டை |
| அண்ணல் யானை | - | ஆண்யானை |
| புரவி | - | குதிரை |
| அணிதேர் | - | அலங்கரிக்கப்பட்ட தேர் |

## பொழிப்புரை

பனைமரத்தின் இனிமை நிறைந்த திரண்ட பழத்திலுள்ள ஒரு பெரிய விதையானது வானத்தை முட்டுவது போல உயர்ந்து செழிப்புற்று வளர்ந்தாலும் ஒருவர் இருப்பதற்குக்கூட நிழல் தந்து உதவ மாட்டாது. ஆலமரத்தின் சிறிய பழத்திலுள்ள தெளித்துக் கிள்ளி எடுக்கக்கூடிய ஒரு விதையானது தெளிந்த நீரையுடைய குளத்தில் வாழும் சிறிய மீனின் முட்டையிலும் பார்க்க நுண்மையானது ஆயினும் களிற்று யானை அலங்கரிக்கப்பட்ட தேர் குதிரை காலாட்படை ஆகியவற்றோடு மன்னர்களும் சேர்ந்து தங்குவதற்கு நிழல் தந்து உதவும். ஆதலால் உருவத்தால் பெரியவர்கள் எல்லோரும் குணத்தால் உயர்ந்தவர்கள் ஆகமாட்டார்கள். உருவத்தாற் சிறியவர்களும் குணத்தால் சிறியவர்கள் ஆகவும் மாட்டார்கள்.

நால்வகைப்படைகள்



தேர்ப்படை




குதிரைப்படை



கலாட்படை



யானை படை

# பனைமரத்தின் இயல்பு

- பெரிய கொட்டையிலிருந்து முளைத்தல்
- உயரமாக வளர்ந்தல்
- ஒருவர் இருப்பதற்கு கூட நிழல் கொடுத்து உதவ முடியாமை.





# ஆலமரத்தின் இயல்பு :

- ❖ நுண்ணிய விதையிலிருந்து முளைத்து வளர்ந்தல்
- ❖ நாற்படைகளும் மன்னர்களும் தங்குவதற்கு இடம் கொடுத்தல்
- ❖ நிழல் தந்து உதவுகின்றமை





## பொதுக் கருத்து

உருவத்தால் , தோற்றத்தால் , செல்வம் , குலம் ஆகியவற்றால் பெரியவர்கள் உலகத்தில் பெரியவர்கள் ஆகமாட்டார்கள். அதுபோல் சிறியவர்களும் சிறியவர்களாக மாட்டார்கள். ஒருவர்க்கு உதவுகின்ற தன்மையைப் பொறுத்தே அவர்கள் பெரியவனா ? சிறியவனா ? என்பது தீர்மானிக்கப்படும் என்பதனை விளக்குவதற்காக பனைமரம் சிறியவர்களுக்கும், ஆலமரம் பெரியவர்களுக்கும் உதாரணங்களாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

வினா :

1. சிறியாரின் இயல்புகளை விளக்குக
2. பெரியாரின் இயல்புகளை விளக்குக
3. ஆலமரத்தின் இயல்புகளை விளக்குக
4. பனைமரத்தின் இயல்புகளை விளக்குக

பின்வரும் இணைப்பினை பயன் படுத்தி வினாக்களுக்கு விடை தருக

https://docs.google.com/forms/d/1t9jJCVOZ8RGl4jT1tM65V
MLaXb7DcyNoN5LQ0hClkWk/edit